## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் - 2013

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 108 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன்என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 1,314,600,400 கிரயம் கொண்ட சொத்துக்களை மீள்மதிப்பீட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2001 ஆம் ஆண்டில் ரூபா 61.5 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட கொஹுவல இல் உள்ள காணியும் கட்டிடமும் பல்கலைக்கழகத்தின் தேவைக்கு அமைவாக காணப்படாமையால் களனி பல்கலைக்கழகத்தின் அழகியல் கற்கைகள் நிறுவனத்திற்கு 2003 ஒக்தோபர் 17 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்த போதிலும், இக் கையளிப்பு சம்பந்தமான சீராக்கம் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

ஆராய்ச்சி முற்பணங்கள் கணக்கு மீதிக்கும் (மருத்துவ பீடம்) கணக்குகளிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளிற்குமிடையே ரூபா 77,753 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.2.3. கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புனர்நிர்மாண ஆய்வுகூடம் மற்றும் கற்றல் உபகரண முற்பணங்களில் ரூபா 90,249 மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த முற்பணங்கள் வழங்கப்பட்ட நபர்கள் அல்லது நிறுவனங்கள் தொடர்பிலான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த மீதி இனங்காணப்பட்டிராத மீதியாகும் என்பது வெளிப்பட்டது.

(ஆ) நிதி நிலைமை விபர முற்பணங்களில் உள்ளடங்கியுள்ள மஹரகம நகர சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,310,000 மூலதன முற்பணத்தை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு கோவைகள் பல வருடங்களாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி நிலைமை விபரத்தில் நானாவித முற்பணங்களாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 94,690,359 ஆன மீதியில் உள்ளடங்கியுள்ள 5 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட ரூபா 3,818,485 மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மஹாபொல புலமைப்பரிசில்களை வழங்குவதற்காக மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து கிடைக்கின்ற தொகையிலிருந்து உரித்துக் கோரப்படாத புலமைப்பரிசில் நிதிகள் உடனடியாக மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், இரண்டு முதல் ஐந்து ஆண்டுகால வீச்செல்லைக்குட்பட்ட ரூபா 11,753,550 புலமைப்பரிசில் நிதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நானாவித வைப்புக் கணக்குகளில் 5 ஆண்டுகளிற்கும் மேலான ரூபா 4,060,069 தொகையும் இரண்டு முதல் ஐந்து ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 2,295,569 தொகையும் காணப்பட்டதுடன், அத்தொகைகளை இனங்கண்டு தீர்வுசெய்வதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல வருடங்களாக காணப்பட்டு வருகின்ற பாடநெறிகளிலிருந்தும் செயற்திட்டங்களிலிருந்தும் கிடைக்க வேண்டிய ரூபா 291,642 தொகை இது வரை கிடைத்திருக்காததுடன் அதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவை | |
| (i) 5 ஆம் அத்தியாயத்தின் 7.6.1 ஆம் பிரிவு | உடன்படிக்கைகளை முறித்துக்கொண்ட விரிவுரையாளர்களினால் செலுத்தப்பட வேண்டிய பிணைமுறிகளின் பெறுமதியினை குறித்துரைத்த காலத்தில் செலுத்தவதற்கு தவறும் பட்சத்தில் மூன்று வாரங்களிற்குள் பிணைதாரருக்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 5 ஆம் அத்தியாயத்தின் 7.8 ஆம் பிரிவு | உடன்படிக்கைகளை முறித்துக்கொண்டு பதவி வறிதாக்கப்பட்டதாக கருதப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த வெளிநாடுகளில் குடியேறியுள்ள விரிவுரையாளர்கள் தொடர்பில் அறிவிக்கப்பட வேண்டிய தரப்பினர்களிற்கு எவ்வித அறிவிப்புக்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 20 ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு மற்றும் 10 ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் கல்விசார் பதவியணி யினருக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,087,509,732 தொகையான சம்பளம் மற்றும் படிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வருகைகள் மற்றும் வெளியேற்றப் தங்காது பதவியை |

---

| | | |
|---|---|---|
| | | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் கல்விசார் பதவியணியினரின் வருகைகள், வெளியேற்றங்கள் மற்றும் அவர்களின் விடுமுறைகளை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக நடைமுறையொன்றை தயாரித்துக்கொள்ள வேண்டுமென்று பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரை நடைமுறையொன்றை தயாரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 செப்தெம்பர் 09 ஆந் திகதிய 830 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | பாடநெறிகளை பயில்வதற்காக பல்கலைக் கழகத்தில் கட்டணங்களை பெறுவதற்கு தகுதிபெறுவதற்காக, குறித்த ஊழியர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும், சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக தகுதிகாண் காலத்திலுள்ள 23 விரிவுரையாளர்களிற்கு 26 பாடநெறிகளிற்காக ரூபா 1,992,170 பாடநெறிக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (இ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 3.4 (அ) ஆம் வழிகாட்டல் | எல்லா சந்தர்ப்பங்களிலும் தேசிய போட்டிமிக்க கூறுவிலைகோரல் கொள்கையை பின்பற்ற வேண்டிய போதிலும், அதற்கு முரணாக பல்கலைக்கழகத்தின் இரண்டு உணவகங்கள் மீளாய்வாண்டில் ஊழியர்களிடையே சீட்டிழுப்பு குழுக்கள் முறையில் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய 14/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்தின் கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 20,507,333 மிகையொன்றானதுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 73,197,266 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 93,704,599 ஆன வளர்ச்சி காட்டப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் 4 பீடங்களில் கல்வி கற்றிருந்த 10,455 மாணவர்களிற்காக ரூபா 1,813,208,326 மீண்டெழும் செவினமாக செலவிடப்பட்டிருந்தது. அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் 9,619 மாணவர்களிற்காக ரூபா 1,436,252,349 மீண்டெழும் செவினமாக செலவிடப்பட்டிருந்தது. அதன்படி, ஒட்டுமொத்த மாணவரொருவருக்கான கிரயம் ரூபா 149,214 இலிருந்து ரூபா 173,429 வரை ரூபா 24,115 ஆல் அல்லது 16 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. ஒவ்வொரு பீடத்தினதும் மாணவொருவருக்கான கிரயம் வெவ்வேறாக கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| பீடம் | மாணவரொருவருக்கான கிரயம் | |
|---|---|---|
| | 2013 | 2012 |
| | ரூபா | ரூபா |
| பிரயோகரீதியான விஞ்ஞான பீடம் | 218,901 | 196,706 |
| மானிடக் கலைகள் சமூக விஞ்ஞான பீடம் | 156,310 | 136,144 |
| முகாமைத்தவ வர்த்தக பீடம் | 123,438 | 106,007 |
| மருத்துவ பீடம் | 355,329 | 279,361 |

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தனியார் நிறுவனமொன்றிடமிருந்து பெறப்பட்ட விடுதிக்காக 2014 ஆகஸ்ட் வரையான காலத்திற்கு வாடகைகள் செலுத்தப்பட்டிருக்கையில் 2014 செப்தெம்பர் மற்றும் ஒக்தோபர் மாதங்களிற்கான வாடகைகள் தொடர்பில் 2014 மார்ச் 13 ஆந் திகதி ரூபா 1,000,000 முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 யூன் 13 ஆந் திகதி எஞ்சிய ரூபா 640,920 தொகை நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு எதிர்வரும் காலப்பகுதிக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த தேவை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்திருந்த சம்பளங்கள் மற்றும் படிகளிற்கும் 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கைக்கு முரணாகவும் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரப்படுகின்ற வெளிவாரி செயற்திட்ட பாடநெறிகளிலிருந்து கிடைத்திருந்த வருமானத்தில் ரூபா 3,152,491 தொகை படிகளாக கல்விசாராத பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) கல்விசார் விடுமுறைகளைப் பெற்று வெளிநாடுகளிற்குச் சென்றிருந்த விரிவுரையாளர்களில் ஒப்பந்தங்களை முறித்துக்கொண்ட 41 நபர்களின் பிணைமுறிகளின் பெறுமதி ரூபா 85,304,889 ஆகக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அத் தொகையில் ரூபா 71,633,636 இன்னும் அறவிடப்பட வேண்டியிருந்தது. நீண்டகாலம் சென்றிருந்த மேற்படி பிணைமுறிகளிற்காக உத்தியோகத்தருக்கு அல்லது பிணைதாரருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 ஏப்ரல் 20 ஆந் திகதிய 1/2001 ஆம் இலக்க உயர் கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் ஆய்வு அறிக்கைகளில் உள்ளடங்கியிருந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்ச்சிக் குழு திருப்திப்படுமாயின் மாத்திரம் எதிர்வரும் ஆண்டிற்காக ஆய்வு படிகள் செலுத்தப்பட முடியுமாயினும், 2012 ஆம் ஆண்டின் ஆய்வு அறிக்கைகளின் மீது கவனம் செலுத்தாது 2013 ஆம் ஆண்டில் ரூபா 84,110,368 தொகையான ஆய்வுப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(உ) ரூபா 70 மில்லியன் கிரயம் கொண்ட பல்கலைக்கழக கழிவுநீரை அகற்றும் செயற்திட்டத்திற்காக 2003 ஆகஸ்ட் 06 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், அந்த நிர்மாண நடவடிக்கைகளிற்காக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு அடிப்படை திட்டத்தினை தயாரிப்பதற்காக ரூபா 2,336,090 செலுத்தப்பட்டிருந்தது. பொது முயற்சிகள் குழுவினால் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டவாறு அச்செயற்திட்டத்திற்குப் பதிலாக நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த கழிவுநீர் சேகரித்தல் (Collection Network) செயற்திட்டம் இது வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 250 இற்கு மேற்பட்ட மின்சார அலகுகளை பயன்படுத்துகின்ற 4 ஊழியர் சிற்றுண்டிச் சாலைகளிலிருந்து மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 597,888 மின்சாரக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்துதடன், 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 3,116,772 மின்சாரக் கட்டணத்தை அறவிடுவதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை தயாரிப்பதற்காக தனியார் கம்பனியொன்றிற்கு 2005 ஆம் ஆண்டில் ரூபா 1,147,412 செலுத்தப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட திகதி வரை நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிறுவனமொன்றிடமிருந்து விடுதியொன்றை வாடகைக்கு பெறுதல் தொடர்பிலான 2004 திசெம்பர் 23 ஆந் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்துடன் இணங்காத வகையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 12,868,737 குறித்த நிறுவனத்திற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. வாடகைத் தொகையினை அதிகரிப்பது தொடர்பாக அமைச்சரவைத் தீர்மானத்தை திருத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனங்களில் வேலையாற்றுவதற்காக சம்பளத்தை மீள்நிரப்புதல் அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்த இரண்டு விரிவுரையாளர்களிற்கு பல வருடங்களாக செலுத்தப்பட்டிருந்த சம்பளங்களிலிருந்து ரூபா 1,690,141 தொகை இன்னும் மீள் நிரப்பப்பட வேண்டியிருந்த போதிலும், இத் தொகையினை மீள் நிரப்ப முடியாது என குறித்த நிறுவனங்கள் அறிவித்துள்ளன. அதன்படி, அத் தொகையினை குறித்த விரிவுரையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டின் இறுதியளவில் ஊழியர்களிற்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,201,370 தொகையான வாகன, இடர் மற்றும் ஊழியர் கடன்கள் பல வருடங்களாக அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி உதவிகளின் கீழ் ஆராய்ச்சிகளை நடாத்துவதற்காக 2005 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பிரேரணைகளை சமர்ப்பித்திருந்த 147 விரிவுரையாளர்களில் ரூபா 14,305,845 தொகையை பெற்றுக்கொண்டிருந்த 45 விரிவுரையாளர்கள் தமது ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு ஒரு ஆண்டு முதல் எட்டு ஆண்டுகள் வரை தாமதித்திருந்தனர்.

(ஆ) மருத்துவ பீடத்திற்காக ''மெத்செவன'' காணியில் ஏறத்தாழ 5 ஏக்கர் காணிக்கு 1998 ஆம் ஆண்டு வரை 3 சந்தர்ப்பங்களில் ரூபா 24 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், அதில் இதுவரை 1 ஏக்கர் 34.2 பேர்ச் மாத்திரமே கையேற்கப்பட்டிருந்தது. செலுத்தப்பட்டிருந்த ரூபா 24 மில்லியன் தீர்க்கப்படாத முற்பணமாக பல வருடங்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**4.4 நிதியங்களின் குறைப் பயன்படுத்தல்**

ரூபா 25,371,411 கூட்டுத்தொகையான 69 வெகுமதி நிதியங்கள் (Endowment Funds) கையேற்கப்பட்டு அதில் ரூபா 18,537,995 மாத்திரம் முதலீடு செய்யப்பட்டிருந்தது. நிதியத்தில் காணப்படுகின்ற ரூபா 6,833,416 எஞ்சிய தொகையினை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

300 மாணவர்களிற்கு விடுதி வசதிகளை வழங்கும் நோக்குடன் 1998 மே 05 ஆந் திகதி மேல் மாகாண சபைக்கு ரூபா 1.6 மில்லியன் செலுத்தியிருந்த பொரலஸ்கமுவையில் அமைந்துள்ள 41.31 பேர்ச் காணியின் உரித்தினை 2003 ஆகஸ்ட் 06 ஆந் திகதி கெஸ்பேவ பிரதேச செயலாளர் பல்கலைக்கழகத்திற்கு கையளித்திருந்தார். அத்திகதியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் காணி பயனுள்ள பணிகளிற்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன், எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(ஆ) கட்டுப்பாட்டுக் கணக்குகள்
(இ) சில்லறைக் காசு
(ஈ) சுயாதீன நிதியளித்தல் பாடநெறி முகாமைத்துவம்
(உ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஊ) உடன்படிக்கைகளும் பிணை முறிகளும்